முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 551**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.04.2021, வெள்ளிக்கிழமை

1. அறம்காக்கும் அண்ணலே தர்மஞானியே
அவதாரம் என்சக்தியாய் உலகில் எடுத்து
வரம்பெற்று உலகோர்க்கு ஞானசக்தி
வள்ளலாய் அருளவந்த மாதவசியே
2. தவசியே உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
தரணியிலே சுப்ரமணியர் யானும் விளம்பிடுவேன்
அவணியில் உன் சக்தி உலகை மாற்றும்
அவதார உன் நோக்கம் இந்த கலியில் நிறைவேறும்
3. நிறைவேற்றி நிலவுலகை ஞான யுகமாக
நின்எண்ணம் வழி ஆறுமுகன் மாற்றி அருள்வேன்
குறைபோக்கி இந்த கலியுகத்தை ஆற்றல்மிக்க
குருபரண் என் ஞான ஆட்சிக்குண்டான பூவுலகாக
4. ஆகவே மாற்றி அற்புதம் நடத்துவேன் அரங்கனே உந்தனுக்கு சர்வசக்தியாக
ஆற்றல்மிக்க ஞான சக்தியாக
வரங்கள் தந்து நித்தம் நித்தம் ஆறுமுகன் யான்
வல்லமை கூட்டி வருதல் காண
5. காணவே உன்னை காணும் மக்களுக்கு
கலியுகத்தில் ஞானசித்தி உறுதிஉறுதி
ஞானமாக உன்னை தொடருபவர்க்கு
ஞானசித்தி யோகசித்தி உறுதிஉறுதி
6. உறுதிகொண்டு உன்வழி வருபவர்க்கு
உலகத்தில் ஞானிகளாகும் தன்மைகூட்டி
பெருமைபட உன் சீடரென அடையாளம் கொண்ட
பூவுலகோரைக் கொண்டே இந்த உலகமாற்றத்தை
7. உலகமாற்றத்தை ஆறுமுகன் யான் நிகழ்த்தவிருக்க
ஓங்காரன் உன் வழியே இந்த அற்புதம் நடக்கும்
தயவுபட இந்த கலியுகத்தை உன் அவதாரத்தின் வழி
தண்டாயுதன் மாற்றி பேர் அற்புதம் நிகழ்த்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.